செ.வெ.எண். 884    நாள்-08-10-20

<u>செய்தி வெளியீடு</u>    <u>நாள்: 08.10.2010</u>

# சிமெண்ட் மூட்டை ரூ. 200க்கான சலுகை விலை விற்பனை தொடரும்

## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் அறிவிப்பு

தமிழக அரசு 1000 சதுர அடி வரை வீடுகட்டும் ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களுக்கு சலுகை விலையில் சிமெண்ட் அதாவது 50 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூ. 200 என்ற விலையில் 400 மூட்டைகள் வரை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகள் மூலம் விற்பனை செய்யும் திட்டத்தை ஜனவரி 2008 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்ட பிறகு வெளிச் சந்தையில் சிமெண்ட் விற்பனை குறையத் தொடங்கியதால் இத்திட்டத்தின் மூலம் நடைபெற்ற விற்பனையும் குறைந்திருந்தது. தற்போது வெளிச்சந்தை சிமெண்டின் விலை அதிகரித்து வருவதால் ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்கள் பயனடையத்தக்க வகையில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தை மீண்டும் தீவிரமாக செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகள் மூலம் விற்பனை செய்ய ஏதுவாக சிமெண்ட் ஆலைகளிலிருந்து தேவையான அளவு சிமெண்ட் பெற்று பொது மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்து நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலும் தேவையான அளவு சிமெண்ட் இருப்பு வைக்கப்படும் என்றும் இத்திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு ஒரு மூட்டை சிமெண்ட் ரூ. 200க்கு தொடர்ந்து கிடைக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படும்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9